Source: *Tamil Murasu,* p2
Date: 4 May 2016

புற்று நோயாளிகளின் உடல் எடை குறையும் பிரச்சினைக்கு புதிய சிகிச்சை கண்டுபிடிப்பு

புற்று நோயாளிகளுக்கு உடல் எடை குறைவது ஒரு பிரச்சினை யாகவே இருந்து வருகிறது.

இந்த நிலையில் இந்தப் பிரச் சினைக்குத் தீர்வு காணும் வகை யில் புதிய சிகிச்சை முறை சிங்கப் பூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் தேசிய புற்றுநோய் நிலையத்தின் சிங்கப்பூர் மரபணு ஆய்வுக் கழகமும் டியூக்–என்யுஎஸ் மருத்துவப் பள்ளியும் புற்று நோயாளிகளிடம் எடை குறை வதற் கான முக்கிய காரணத்தைக் கண்டறிந்துள்ளன.

உடலின் கொழுப்புச் சத்தை தசைகள் அதிகப்படியாகக் கரைத்துவிடுவதே எடை குறை வதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று. இந்தப் புதிய கண்டுபிடிப்பு, உடல் எடைக்குறைவின் பக்க விளைவுகளாலே கூடுதலாக கொழுப்பு அமில ஆக்சிஜன் ஏற்றம் நடைபெறுவதாகக் கூறப் படுவதற்கு சவாலாக அமைந் துள்ளது. இந்த நிலையில் புதிய கண்டு பிடிப்பை அடிப்படையாகக் கொண்டு புதிய சிகிச்சை முறையை ஆய்வுக் குழுவினர் வடிவமைத்துள்ளனர்.

இவ்வாண்டின் பிற்பகுதியில் புதிய சிகிச்சைக்கான சோதனை மேற்கொள்ளப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.